**செய்தி வெளியீடு எண்: 593** **நாள்: 30.08.2018**

# செய்தி வெளியீடு

2018 ஆம் ஆண்டிற்கான அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கை மாவட்ட கலந்தாய்வு மூலம் முதற்கட்டமாக 04.07.2018 முதல் 19.07.2018 வரையிலும் இரண்டாம் கட்டமாக 20.08.2018 முதல் 23.08.2018 வரையிலும் நடைபெற்றது.

முதல் மற்றும் இரண்டாம் கட்ட கலந்தாய்வுகளுக்கு பின் ஏற்பட்டுள்ள காலியிடங்களை மூன்றாம் கட்ட கலந்தாய்வு மூலம் சேர்க்கை மேற்கொள்ளப்படவுள்ளதால் 28.08.2018 முதல் 12.09.2018 வரை மாணவர்களிடமிருந்து இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாணவர்கள் www.skilltraining.tn.gov.inஎன்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

தமிழகத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலைய விவரங்கள், தொழிற் பிரிவுகள், இவற்றிற்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீடு ஆகியவை இணையதளத்தில் உள்ள விளக்க கையேட்டில் (Prospectus) தரப்பட்டுள்ளன.

மாணவர்கள் இணையதளத்தில் கொடுத்துள்ள அறிவுரைகளை கவனமாக படித்து புரிந்துக்கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் எந்த மாவட்டத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள் என்ற விவரம் குறிப்பிட வேண்டும். ஒரு மாணவர் விரும்பினால் பல மாவட்டங்களில் தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். மதிப்பெண் அடிப்படையில் மாவட்ட கலந்தாய்வுக்கான நிகழ்ச்சி நிரலும் இதே இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும். இணையதளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் என்ற விவரம் தரப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின் படி மாணவர்கள் single window முறையில் தாங்கள் சேர விரும்பும் தொழிற்பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யலாம்.

மூன்றாம் கட்ட கலந்தாய்வானது 20.09.2018 முதல் 22.09.2018 வரை நடைபெறவுள்ளது. மதிப்பெண் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் முதலில் 8$^{th}$பொறியியல் பிரிவுகள், 8$^{th}$பொறியியல் அல்லாத பிரிவுகள், 10$^{th}$ பொறியியல்பிரிவுகள், 10$^{th}$பொறியியல் அல்லாதபிரிவுகள் மற்றும் 12$^{th}$பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் கலந்தாய்வுக்கு அழைக்கப்படுகிறார்கள்.

கலந்தாய்வு நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் ஆகிய விவரங்கள்விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தின் போது அளித்த கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் கலந்தாய்விற்காக அழைப்பு ஆணை (Call letter) அனுப்பப்பட மாட்டாது.

www.skilltraining.tn.gov.inஎன்ற இணையதளத்தில் விண்ணப்பதாரரின் விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து விண்ணப்பதாரருக்கான கலந்தாய்வு தேதி, இடம் மற்றும் நேரம் ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம். அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் மாவட்ட கலந்தாய்வு குறித்த விபரங்கள் இந்த இணையதளத்தில் வெளியிடப்படும்.

மேலும் விவரங்களை அறிய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தில் உள்ள கீழ்காணும் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய (Nodal ITI) முதல்வரை தொடர்பு கொள்ளலாம்.

| வரிசை எண் | மாவட்டம் | கலந்தாய்வு நடைபெறும் தொழிற்பயிற்சி நிலையம் | தொலைபேசி |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூர் | 044–26252453 |
| 2 | சென்னை | அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி | 044–22501530 |
| 3 | காஞ்சிபுரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், செங்கற்பட்டு | 044–27431242 |
| 4 | வேலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், வேலூர் | 0416–2290848 |
| 5 | திருவண்ணாமலை | அரசுதொழிற்பயிற்சிநிலையம்,திருவண்ணாமலை | 04175–2233018 |
| 6 | கோயம்புத்தூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், கோயம்புத்தூர் | 0422–2642041 |
| 7 | நீலகிரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், குன்னூர் | 0423–2231759 |
| 8 | திருப்பூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், திருப்பூர் | 0421–2429201 |
| 9 | ஈரோடு | அரசு தொழிற்பயிற்சி நிலையம், ஈரோடு | 0424–2275244 |
| 10 | சேலம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், சேலம் | 0427–2400074 |
| 11 | நாமக்கல் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், (மகளிர்) நாமக்கல் | 04286–267976 |
| 12 | தர்மபுரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், தர்மபுரி | 04248–235323 |
| 13 | கிருஷ்ணகிரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், ஒசூர் | 04344–262456 |
| 14 | மதுரை | அரசு தொழிற்பயிற்சி நிலையம், மதுரை | 0452–2566183 |
| 15 | தேனி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், தேனி | 04546–252240 |
| 16 | இராமநாதபுரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், பரமக்குடி | 0454–231300 |
| 17 | திண்டுக்கல் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், திண்டுக்கல் | 0451–2471414 |
| 18 | புதுக்கோட்டை | அரசு தொழிற்பயிற்சி நிலையம், புதுக்கோட்டை | 04322–221584 |
| 19 | சிவகங்கை | அரசு தொழிற்பயிற்சி நிலையம், சிவகங்கை | 04575–292494 |
| 20 | திருச்சிராப்பள்ளி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி | 0431–2552238 |
| 21 | கரூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், (மகளிர்) கரூர் | 04324–243050 |
| 22 | தஞ்சாவூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், தஞ்சாவூர் | 04362–237054 |
| 23 | நாகப்பட்டினம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், நாகப்பட்டினம் | 04365–230129 |
| 24 | திருவாரூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், நீடாமங்கலம் | 04367–293088 |
| 25 | அரியலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், அரியலூர் | 04329–228408 |
| 26 | பெரம்பலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், பெரம்பலூர் | 04328–290590 |
| 27 | கடலூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், கடலூர் | 04142–290273 |
| 28 | விழுப்புரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டை | 04149–222339 |
| 29 | திருநெல்வேலி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், திருநெல்வேலி | 0462–2342005 |
| 30 | விருதுநகர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம், விருதுநகர் | 0456–2252382 |
| 31 | தூத்துக்குடி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், தூத்துக்குடி | 0461–2340133 |
| 32 | கன்னியாகுமரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம், நாகர்கோவில் | 0465–2260463 |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**